

# என் கதை


சிறீரஞ்சனி

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics

5.1

STEM-Kalvi Charity

இன்றைக்குத்தான் நான் பிறந்தேன். இல்லை, இல்லை, உண்மையில் நான் பிறந்து நான்கு மாதங்களுக்கு மேலாகிவிட்டது.



இன்றைக்குத்தான் தவளை ஆகி இருக்கிறேன். ஆச்சரியமாக இருக்கிறதா?

நீங்கள் குழந்தையாக இருந்தபோது, எப்படி இருந்தீர்கள் என்பதை உங்களின் பழைய நிழற்படங்களில் பார்த்திருப்பீர்கள். இல்லையா? நீங்கள் பிறந்தபோது உங்களின் பெற்றோரை ஒத்திருந்தீர்கள். ஆனால், நான் பிறந்தபோது என் பெற்றோரை ஒத்திருக்கவில்லை. அவர்களிலிருந்து நான் முற்றிலும் வேறுபட்டிருந்தேன்.

இன்னும் சொல்லப்போனால் என்னுடைய பெற்றோர் யாரென்றே எனக்குத் தெரியாது.



என்னுடைய அம்மா நூற்றுக்கணக்கான முட்டைகளை இட்டுக்கொண்டிருந்தார். அப்போது அவை கருக்கட்டி அவற்றிலிருந்து நானும் என் சகோதரர்களும் பிறப்பதற்கு அப்பா உதவிசெய்திருந்தார்.

உடலுக்கு வெளியே இவ்வாறாக நிகழும் கருக்கட்டலைப் புறக்கருக்கட்டல் என்பர்.

அது சரி, அம்மா ஏன் நூற்றுக்கணக்கில் முட்டைகளை இட்டார் என்று யோசிக்கிறீர்களா?

ஏனென்றால், முட்டைகள் நீரில் இடப்படுவதால், நீரோட்டம் முட்டைகளைக் கொண்டுபோய்க் கரையில் சேர்க்கக்கூடும். எங்களுடைய ஆரம்பகால வாழ்க்கைக்கு நீர் அவசியமென்பதால் கரையில் சேர்க்கப்பட்ட முட்டைகளிலிருந்து தவளைகள் உருவாகமுடியாது. வேறு சில முட்டைகளை நீர்வாழ் உயிரினங்கள் தங்களின் உணவாக்கக்கூடும். இந்த ஆபத்துக்களை எல்லாம் மேவி எங்களில் சிலராவது வாழவேண்டும் அல்லவா? அதுதான் அம்மா தாராளமாக முட்டைகளை இட்டிருந்தார்.

முட்டைகள் யாவும் ஜெலி போன்ற தோற்றத்துடன், தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றிலிருந்து நான் வெளியேறினேன். நான் வெளியேறுவதற்குச் சூரிய வெப்பம் எனக்கு உதவிசெய்திருந்தது.



பின்னர் கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு என்னால் அதிகம் அசைய முடியவில்லை. முட்டையில் மீதமாக இருந்த உணவைச் சாப்பிட்டபடி உயிர்வாழ்ந்தேன்.

அப்போது என் உடலில் அவயவங்கள் எதுவும் இருக்கவில்லை. நீளமான ஒரு வால் மட்டும் இருந்தது. இந்த நிலையில் என்னை வாற்பேய் என்பார்கள்.



நான் அசையத் தொடங்கியபோது ஒரு மீனைப் போலவே செயற்பட வேண்டியிருந்தது. ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு நீந்தியே சென்றேன். அதேபோல, என் உடலில் இருந்த பூ எனப்படும் அமைப்புக்கூடாக ஒட்சிசனைப் பெற்றுக்கொண்டேன். அதாவது சுவாசித்தேன். நீரில் இருந்த சிறிய தாவரங்கள் என் பசிக்கு உணவாகின.

இப்படியாகக் கிட்டத்தட்ட 14 வாரங்கள் இருந்தேன்.

முடிவில், மெதுமெதுவாக என் உடல் குறுகி, அதில் கால்கள் முளைக்க ஆரம்பித்தன. என் நீண்ட வாலும் குறுகத் தொடங்கியது.




பூப் போன்ற அமைப்பு இல்லாமல் போய், சுவாசிப்பதற்காகச் சுவாசப்பை உருவானது. அப்போதுதான் நான் ஒரு குட்டித் தவளையாகக் காட்சியளித்தேன்.

இந்த மாற்றம் உருமாற்றம் எனப்படுகின்றது,

தவளையாக மாறிய பின்னர் நீரிலிருந்து நிலத்துக்கு நான் இடம்பெயர்ந்தேன். அத்துடன், தாவரவுண்ணியாக இருந்த நான் நிலத்துக்குப் போனதும் பூச்சிகளை உண்ணும் மாமிசவுண்ணியாக மாறிவிட்டேன்.

வாற்பேயாக இருக்கும்போது நீரில் வாழ்கிறோம், தவளையான பின்னர் நிலத்தில் வாழ்கிறோம். எனவே எங்களை ஈரூடக வாழிகள் என்பர்.



அத்துடன், உங்களைப்போல நிலையான உடல் வெப்பநிலை எங்களுக்குக் கிடையாது. நாங்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப எங்களின் உடல் வெப்பநிலை மாற்றமடையும்.

இனி, என் சந்ததியை விருத்திசெய்வதற்காக, நான் மீளவும் நீருக்குள் சென்று முட்டைகளை இடுவேன். இடுவதற்கு முதல், முட்டைகள் கருக்கட்டப்படுவதற்காக ஆண் தவளை ஒன்றை நான் கூவி அழைப்பேன்.

**இதுதான் என் கதை.**

**Publisher:** STEM-Kalvi Charity
**E-mail**: STEMkalvi@gmail.com
**Web:** WWW.STEMkalvi.org
**Writer :** Sriranjani Vijenthira,
Toronto, Canada
**Book:** En Kathai
(என் கதை)

**Language: Tamil**

**Reading Level**: 5.1

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022

**Licence:** This license enables reusers to distribute, remix, adapt, and build upon the material in any medium or format, so long as attribution is given to the creator. The license allows for commercial use.

CC BY SA



**About the writer :** Sriranjani writes short stories, essays and reviews, and bilingual children's books. Her short story collections have won the Godage and State Literary awards in Sri Lanka. She also works as a Tamil teacher at the Toronto District School Board. Her bilingual children's books are used as teaching materials across the Toronto region. Sriranjani received her Bachelor of Science from the University of Peradeniya and Master of Arts in Tamil Language & Literature from Annamalai University.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics